ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2397/27 - 2024 අගෝස්තු මස 13 වැනි අඟහරුවාදා - 2024.08.13

*2397/27 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபை**

இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபையானது சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி அதற்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான சபையின் முடிபுகளை அவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென மேற்கூறிய அக்கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்து மூலம் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்கள் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**எச். கே. கே. ஏ. ஜயசுந்தர,**<br>
தவிசாளர்,<br>
இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர்<br>
பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,<br>
கொழும்பு 05,<br>
*2024, ஓகத்து 13.*

1A - G 42479 — 09 (2024/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்ட முடிபுகள் 1949 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதிய 10047 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டனவுமான முடிபுகள் 2014, செத்தெம்பர் 26 ஆந் திகதிய 1881/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிபுகள் II ஆம் பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுதல் வேண்டும்.

**பகுதி II**

**நாளாந்த நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள விகிதம்**

| இலக்கம் | விவரணம் | கொடுப்பனவு |
|---|---|---|
| I. | நாளாந்தச் சம்பளம்<br>(இத்தொகை நாளாந்த வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்குகின்றது என்பதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் கொடுப்பனவிற்கு ஏற்புடையதாகும்.) | ரூபா. 1350.00 |
| II. | உற்பத்தி அடிப்படையிலான ஊக்குவிப்பு | ரூபா. 350.00 |
| III. | நாளாந்த மொத்தக் கொடுப்பனவு | ரூபா. 1700.00 |

EOG 08-0177/1

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை**

தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி அதற்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான சபையின் முடிபுகளை அவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென மேற்கூறிய அக்கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்து மூலம் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்கள் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**எச். கே. கே. ஏ. ஜயசுந்தர,**
தவிசாளர்,
தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித்
தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2024, ஓகத்து 13.

**அட்டவணை**

தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதிய 9441 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டனவுமான முடிபுகள் 2014, யூலை மாதம் 24 ஆந் திகதிய 1872/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிபுகள் II ஆம் பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படல் வேண்டும்.

**பகுதி II**

**நாளாந்த நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள விகிதம்**

| *இலக்கம்* | *விவரணம்* | *கொடுப்பனவு* |
|---|---|---|
| I. | நாளாந்தச் சம்பளம்<br>(இத்தொகை நாளாந்த வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்குகின்றது என்பதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் கொடுப்பனவிற்கு ஏற்புடையதாகும்.) | ரூபா. 1350.00 |
| II. | உற்பத்தி அடிப்படையிலான ஊக்குவிப்பு | ரூபா. 350.00 |
| III. | நாளாந்த மொத்தக் கொடுப்பனவு | ரூபா. 1700.00 |

EOG 08-0177/2